# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
**சந்தாதாரரின் கவனத்திற்கு**

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | 4-50 |
| 3 மாத | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 17-ம் இல.


# இன்றைய உலகில் தேவ அழைத்தல்

**[தேவ அழைத்தல் நாளாகக் கொண்டாடப்பட்ட ஏப்பிரல் 12-ம் நாளன்று அகில உலக மக்களுக்கு பரி. தந்தை கூறிய நல்லுரையின் சாரம்]**

உலகில் காணப்படுவது, உணவுப் பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம், வேலைப் பஞ்சம் முதலியன. "இன்றைய திருச்சபையில் காணப்படுவது ஆள் பஞ்சம்-தேவ அழைத்தல் பஞ்சம். இறைவனுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வாழ விரும்பும் ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. கடவுள் மீதுள்ள அன்பினால், தனக்குள்ள தெல்லாவற்றையும் துறக்கும் துறவியாகவோ, ஆன்மாக்களுக்குப் பணிபுரிய வேண்டும் என்று விரும்பி குருவாகவோ ஆசிக்கும் வாலிபர்கள் யார்? இக்கேள்விக்கு விடையளிக்க வேண்டியது கடவுளால் அழைக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கலப்பு விவாக சட்டங்களில் சில திருத்தங்கள்

கலப்பு விவாகம் என்று கூறப்படுவது, ஆண், அல்லது பெண் ஆகிய கத்தோலிக்கர் ஒருவர் கத்தோலிக்கரல்லாத எதிர்ப்பாலாரை மணந்து கொள்வதேயாம். சிறந்தகத்தோலிக்க குடும்ப வாழ்க்கைக்கு மணம் செய்துகொள்ளும் இருபாலாரும் கத்தோலிக்கராய் இருப்பதே சிறந்தது. இக்கோட்பாட்டில் மாற்றம் ஒருபோதும் இருக்கமுடியாது. ஆனல் ஒருபாலார் கத்தோலிக்கராயில்லாதிருந்தும் திருமணம்காதல் நிமித்தமாகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ நடந்தேறவேண்டியதாகவும் இருக்கின்றது. இச்

(தொடர்ச்சி 6-ம பக்கம்)

# குருமார் தொகை குறைந்தாலும் விரத்தத்துவம் கைவிடப்பட மாட்டாது

பலதேசிய மேற்றிராணிமார்சபையினர் பரிசுத்த பாப்பரசருக்குக் கொடுத்துவரும் வாக்குறுதி போல ஆபிரிக்க கண்ட கொங்கோ பிரதேச மேற்றிராணிமார் சபையும் அண்மையில் விரத்தத்துவ வாக்குத்தத்தத்தை கைநெகிழாது, இதனல் குருமார் தொகை குறைந்தபொழுதிலும் தமது பிரதேச ஒழுங்குகள் இருக்குமென வாக்குறுதிகொடுத்திருக்கின்றனர். குருத்துவத்துக்கு விரத்தத்துவம் இன்றியமையாதது அல்லவாயினும், கத்தோலிக்க திருச்சபையின் பலகால பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தும், பரிசுத்த தந்தை அண்மையில் வெளிப்படுத்திய நிருபத்துடன் ஒத்துழைத்தும் தாம் இம்முடிவுக்கு வந்திருப்பதாக அவர்கள் அறிவித்திருக்கின்றனர்.

# ஆபிரிக்காவின் கவனிக்கப்படாத மக்கள்

10வருடகாலமாக தென் ஆபிரிக்க மக்களுடன் வாழ்ந்து அவர்களது இன்றைய நிலைமையை நன்கு அறிந்தவரும் 34 வயது நிரம்பியவருமாகிய வண. டைஸ்மண்ட் சுவாமியார் "ஆபிரிக்காவின் கவனிக்கப்படாத மக்கள்" என்றமகுடத்துடன் அண்மையில் எழுதிய நூலில் தென் ஆபிரிக்க கறுத்தநிற மக்கள் படும்உபத்திரவங்களை நன்கு விளக்கியிருக்கிறார். கறுத்தநிற மக்கள் வெள்ளையர்கள் வசிக்கும் இடங்களுக்கப்பால் பெரும் அல்லல் நிறைந்த இடங்களில் வசிக்க அனுப்பப்படுகிறார்கள். குடும்பங்கள் ஒன்றாய் வாழவசதிகள் செய்யப்படுவதில்லை. அனுப்பப்படும் இடங்களின் சுகாதார நிலையோ பெரும் கேவலம். கறுத்தவர்கள் தொகையில் கூடியவர்களாயிருப்பதால் ஜனநாயகமுறையின்படி அவர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்கப்படாது கோணலான முறையில் என்றென்றும் வெள்ளையரின் அடிமைகளாக வாழ அரசியல் முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அநீதியான அரசாட்சிகள் பல உலகில் இருந்ததை எடுத்துக் காட்டி அவ்வழிபோகாது முறைகளைச் சீராக்க சுவாமியார் அந்நூலில் இரந்து கேட்டுக் கொள்கிறார்.

# சார்டீனியாவில் குதூகலிப்பு

சென்ற மாதம் இத்தாலி தேச சார்டீனியாதிவு இரு பெரும் புகழ்களை எய்தியது. ஒன்று பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரின் விஜயம். மற்றது இத்தாலி தேச உதைபந்தாட்ட பந்தயத்தில் முதல் இடம் பெற்றது. இவ்விருசம்பவங்களும் சாதாரணமாக அமைதியான வாழ்வு நடாத்தி வரும் சார்டீனிய மக்களை பெரும் குதூகலிப்பில் ஈடுபடுத்தியன.

# பல இந்துமத முறைகளைப் பாராட்டினர் கருதினல்

சீரோ-மலபார் பிரிவுக்குச் சேர்ந்தகத்தோலிக்க இந்திய கருதினலும் எர்ணக்குளப் பிரிவின் அதிமேற்றிராணியாருமான பறெக்கற்றில் அடிகளார் சென்றவாரம் ஓர் இந்து சந்நியாசியாருக்கு அப்பகுதியில் நடைபெற்ற உபசாரத்தில் பங்குபெற்று நிகழ்த்திய உரையில் பல இந்துமத முறைகளையும், துறவிகளின் போக்கையும் பாராட்டினர். பாராட்டப்பட்ட சந்நியாசியார் சுவாமி ரங்காநாதனந்தாஜி என்பவரே. இவர் இராமகிருஷ்ண துறவிகளில் ஒருவர். அண்மையில் ஐக்கிய அமெரிக்கா கனடா, ஐரோப்பா, இங்கிலாந்து முதலாம் தேசங்களுக்குச் சென்று பல உபந்நியாசங்களில் பங்குபெற்றுத் தாயகம் மீண்டவர். சென்ற 5000 வருடகாலமாக இந்துமதமானது மக்களைத் தேவனது உணர்ச்சியில் வழி நடத்திக் கொண்டுவந்திருப்பதையும், தேவனது நம்பிக்கையில் இந்துமத துறவிகள் பலவகையான விரதங்களை அனுசரித்துத் தேவனது தொண்டில் தம்மை அர்ப்பணம் செய்து வருவதையும் பாராட்டினர்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

அவரது தாயார், கோளாறு ஏற்பட்ட நேரந்தொடக்கம் சுகமே தன்மகன் மீண்டவரையும் உலகமக்கள் தமக்கு அனுப்பிவந்த ஆறுதல் செய்திகளாலும், மக்கள் தேவன் மேல் காட்டிய நம்பிக்கையாலும் தான் பெரிதும் தேறிக்கொண்டதைத் தெரிவித்து உலகமக்களுக்கு நன்றிகூறித் தேவன் மேல் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கக் கேட்டிருக்கிறார்.

# விரைவில் ஆசிய மேற்றிராணிமார் ஒன்றுகூடுவர்

சென்றவருடம் வத்திக்கானில் நடந்த மேற்றிராணிமார் சினொட்டின் போது அங்கு கூடிய ஆசியாப்பகுதி மேற்றிராணிமார், ஒன்று சேர்ந்து ஆசிய பகுதிக்கு விசேஷமாக உள்ள பலபிரச்சனைகளையும் பற்றி கலந்து ஆலோசிக்க விரைவில் ஒன்றுகூட வேண்டுமென்று அங்கு முடிவுசெய்து கொண்டனர். அதன்பிரகாரம் பிலிப்பையின் தேசத்தில் ஒன்றுகூட ஆயத்தங்கள் நடக்கின்றன. நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்கு ஆசியாவின் மேற்றிராசனங்கள் தேசிய ரீதியில் பிரதிநிதிகளை அனுப்பி ஆயத்தங்கள் செய்கின்றன. இலங்கையின் பிரதிநிதியாக சிலாபமேற்றிராணியார் எட்மண்ட் பீரிஸ் அடிகளார் இதுசம்பந்தமாக அண்மையில் மனிலாசென்று வந்திருக்கின்றார். ஆசிய மேற்றிராணிமாரின் மகாநாடு ஓர் ஆலோசனை மகாநாடாகவே இருக்குமேதவிர அதன்முடிவுகளுக்கு அமைய வேண்டிய கட்டுப்பாடு அற்றதாகவே இருக்குமென ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

# அப்பலோ 13 மக்களை நன்ருய் ஒற்றுமைப் படுத்திற்று

சமீபகாலத்தில் உலகமக்கள் யாவரது இதயங்களையும் ஓரேவகையில் துடிக்கச் செய்த சிறப்பு அப்பொல்லோ(13)க்கே உரியது. நண்பர், சத்துராதிகள் என்ற பாகுபாடின்றி, கொமினிஸ்தர்கள், பிறர் என்ற வித்தியாசமின்றி அப்பொல்லோ (13)இன்வீரர்கள் சேமமே இவ்வுலகில் மீளவேண்டுமென்ற ஆசையே உலகில் யாவரது மனதிலும் இருநாட்களாக நிலைபெற்றிருந்து, அவர்கள் சேமமே மீண்டனர் என்ற சுபசெய்தி எவராலும் ஆனந்தத்தோடு கேட்கப்பட்டது. அப்பொல்லோ (13) இன் வீரர்களில் ஒருவரானவர் லெயொனெட் சுவிகாட் என்பவர்.

(5-ம் கலம் பார்க்கவும்)

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் குருகுலம்

(ஜோ. இருதயராஜ், யே. ச.)

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் சுவையான பல உண்மைகளைத் தெளிவுற நமக்கு எடுத்துரைத்துள்ளது. அவற்றில் ஒன்று சொந்தக் குருகுலத்தின் வளர்ச்சியைப் பற்றியது. திருச்சபையின் மறைபரப்புப் பணித் தீர்மானத் தொகுப்பில் நாம் வாசிக்கிறோம்: "கிறிஸ்துவிடம் புதிதாய் மனந்திரும்பிய மக்களிடையே எத்தனையோ இளைஞர்களுக்குக் கடவுள் வழங்கியிருக்கும் குருத்துவ அழைத்தல் என்ற விலைமதியா கொடைக்காகப் பெருமகிழ்ச்சியோடு திருச்சபை நன்றி செலுத்துகிறது. ஏனென்றால் விசுவாசிகளின் பல்வேறு சமூகங்கள் மீட்பின் பணியாளர்களைத் தம் சகோதரர்களுக்குப் பணிபுரியும் ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் என்னும் திருநிலைகளில் உள்ளவர்களைத் தம் உறுப்பினரிடமிருந்தே பெற்றுள்ளபொழுது ஒவ்வொரு குழுவிலும் திருச்சபை இன்னும் அதிக ஆழமாக வேரூன்றும். இங்ஙனம் புதிய சபைகள் தம் குருகுலத்தை உடையனவாய் சிறிது சிறிதாய் மேற்றிராசனம் எனும் அமைப்பைப் பெறுகின்றன" (எண். 16). ஆயினும் இந்த வத்திக்கானின் போதனை அத்துணை புதிதல்ல. ஏறக்குறைய கடந்த நூறு ஆண்டுகளாகப் பாப்பரசர்கள் சொந்தக் குருகுலத்தின் அவசியத்தை வலியுறுத்தி அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வந்துள்ளனர். அவர்களுடைய சீரிய சுற்றுமடல்களைத் திறந்தால் இது விளங்கும். சிறப்பாக மறைபரப்புத் தந்தையெனப் போற்றப்படும் பதினோராம் பத்திநாதர் இதன் அவசியத்தை நன்கு அறிந்தவர். சமயப் பணியாளர்களை நோக்கிக் கூறினார்: "எல்லாவற்றிற்கும் முன்பாகச் சொந்தக் குருகுலத்தின் முக்கியத்தை நீங்கள் உணரவேண்டும். இந்த குறிக்கோளை முன்னிருத்தி இதற்காக உழைக்காவிடின் நீங்கள் என்றும் எதிர்பாராதது விளைவது திண்ணம், உங்களின் சமயப்பணி பயனற்றுப்போவதுடன் வேதபோதக நாடுகளில் திருச்சபை வேரூன்றிப் பரவுவது தடைப்படும். எனவே நீங்கள் சமயத் தொண்டுபுரியும் நாடுகளில் அந்நிய குருக்களை எதிர்பாராமல் தாங்களே திருச்சபையை நிலையாகப் பரப்புவதற்குச் சொந்தக் குருக்கள் போதிய அளவு தேவை. இவ்வுண்மையைக் கண்டுணர்ந்து கடனுற்ற நீங்கள் முன்வரவேண்டும்."

## தற்போதைய நிலை

திருச்சபை வேரூன்றவும் பரவவும் ஒருசில நாடுகள் இன்னும் அயல்நாட்டுச் சமய ஊழியர்களையே சார்ந்திருக்கின்றன. குறிப்பாக, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்கா, ஆசியா நாடுகளை எடுத்துக்கொள்வோம். ஆபிரிக்காவில் 23,063 இளங் குருமாணவர்களைக்கொண்ட 224 குருத்துவக் கல்லூரிகளும், 2,051 குருமாணவர்களைக்கொண்ட 35 குருத்துவக் கல்லூரிகளும், இருக்கின்றன. இலத்தின் அமெரிக்காவில் 1,001 இளங் குருமாணவர்களுக்கு 16 குருத்துவக் கல்லூரிகளும், 164 குருமாணவர்களடங்கிய 3 குருத்துவக் கல்லூரிகளும் உள. ஆசியாவில் 9,651 இளங் குருமாணவர்களுள்ள 224 குருத்துவக் கல்லூரிகளும், 3,300 குருமாணவர்களுக்கென 31 குருத்துவக் கல்லூரிகளும் இயங்குகின்றன. இன்று ஆப்பிரிக்காவில் 2,000 சொந்தக் குருக்களுடன் உழைக்கும் அயல் நாட்டுக் குருக்களின் எண்ணிக்கை 10,000. ஆசியாவில் 7,0000 சொந்தக்குருக்களும் 5,000 அந்நியக் குருக்களும் இறைபணியில் ஈடுபட்டுள்ளனர். இலத்தின் அமெரிக்காவின் நிலை உண்மையிலே பரிதாபத்திற்குரியது. ஏறக்குறைய இலத்தின அமெரிக்க நாடுகளனைத்தும் கத்தோலிக்க மறையில் பிறந்து வளர்ந்தவை. பொதுநிலையினரின் ஆன்மீக அலுவலைக் கவனிக்கக் குருக்கள் போதிய அளவு இன்மையால் இன்று அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்வு மிகவும் பாழடைந்திருக்கிறது. உலகிலுள்ள கத்தோலிக்கரின் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபகுதி இலத்தின் அமெரிக்காவில் வசிப்பது நம்மில் சிலருக்குத் தெரியாது. இன்று அங்குள்ள 17,30,00,000 கத்தோலிக்க மக்களைக் கண்காணித்துவரும் குருக்கள் 39,000 பேர். அதாவது சராசரி 4,700 கத்தோலிக்கர்களுக்கு ஒரு குருவாக உள்ளது.

## சொந்தக் குருகுலம் ஏன் தேவை?

இலத்தின் அமெரிக்க நாடுகள் மட்டுமன்று இன்னும் பல நாடுகள் அயல் நாட்டுக் குருக்களின் சமயத் தொண்டை நம்பி இருக்கின்றன. சொந்தக் குருக்களை அதிகரிக்க வேண்டுமென்பதற்கு பல காரணங்கள் உண்டு. வேதபோதக நாடுகளுக்கு இதுவரை அனுப்பிவந்த மேனாடுகளிலேயே நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதை நாமறிவோம். இந்நாடுகளில் உலகப் போருக்குப்பின் குருத்துவ, சிறப்பாக மறைபரப்புப் பணித் தேவ அழைத்தலின் எண்ணிக்கை மிகவும் குன்றிவிட்டது. பல்லாண்டுகளாக மறைபரப்புப் பணிக்கு அனுப்பிவந்த ஐரோப்பிய நாடுகளில் பல இன்று உள்நாட்டு ஆன்மீக அலுவலைக் கவனிக்கக் குருக்கள் பற்றாது தவிக்கின்றன. மேலும் ஒருசில வேதபோதக நாடுகள் அந்நிய மறைபரப்புப் பணியாளர்களை அனுமதிப்பதில்லை. அல்லது ஏற்கனவே வந்திருப்பவர்களை வெளியேற்றுவதில் முனைந்துள்ளன. அத்துடன் [illegible] மக்களின் மொழி, பண்பாடு, மரபு, இவற்றிற்கு ஏற்றுப்போல் ஒத்துவாழும் மனப்பாங்கும், அதற்கான பயிற்சியும் அந்நிய மறைபரப்புப் பணியாளர்கள் அனைவரிடமும் எதிர்பார்க்கமுடியாது. அவர்களுடைய சொல்லும் செயலும் ஒருசில சமயங்களில் கத்தோலிக்கருடைய அல்லது பிற மதத்தினருடைய மனத்தைப் புண்படுத்தலாம். கருத்து வேற்றுமையும், போர், உள்நாட்டுக் கலகம் போன்ற நெருக்கடி சமயங்களில் பலமாகி அவர்களின் வெளியேற்றத்திற்கே அடிகோலுவதுமுண்டு. மிகைப்பட அவர்களை நம்பிவாழும் வேதபோதக நாடுகளில் மேற்கூறிய நெருக்கடிக் காலங்களில் கத்தோலிக்க வாழ்விற்கு ஏற்படும் சேதம் வரையறுக்க முடியாது. இலத்தின் அமெரிக்கா, சீனு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். சீனநாட்டில் பல்லாண்டுகளாகஉழைத்து வந்த அன்னிய குருக்களும், சமயப் பணியாளர்களும் தொடக்கத்திலிருந்து சொந்தக் குருகுலத்தின் வளர்ச்சியை முன்னேற்பாடுடன் கவனித்திருந்தால் பொதுவுடமையினரின் ஆதிக்கத்தின்போது இருந்த 70 இலட்சம் கத்தோலிக்கர் 7 கோடியாக இருந்திருப்பர். ஆள்வோரின் பலாத்காரத்திற்குத் தப்பி வாழும் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்தப் போதிய அளவு சொந்தக்குருக்கள் இல்லை.

## திருச்சபை ஆரம்பத்தில்

சொந்தக் குருகுலத்தை உருவாக்கிப் பெருக்குவது அயல்நாட்டு மறைபரப்புப் பணியாளர்களின் ஒருமுக்கிய அலுவல். இவ்வழக்கம் திருச்சபையின் ஆரம்ப வரலாற்றில் காணப்படுகிறது. பிரிந்த கிறிஸ்தவர்களிடையே சமயப் பணிபுரிந்து வந்த தலைவர்களை அண்மையில் மனந்திரும்பினவர்களில் தகுந்த இளைஞர்களைக் குருத்துவப்பணிக்குத் தேர்ந்தெடுக்கும்படி திருச்சபை விரும்பியது. அந்நிய நாட்டுச் சமயப் பணியாளர்களைவிட நாட்டுச் சமயத் தலைவர்கள் இறைபணியைத் திறம்படப் புரிவார்கள் என்பதை நன்குணர்ந்து உள்நாட்டு மக்களிடையே சமயத் தலைவர்களை ஏற்படுத்தியது. திருச்சபையின் துவக்கத்தில் அப்போஸ்தலர்களும் அவர்களின் உதவிக் குழுவினரும் நாட்டிற்கு நாடு கத்லிக்க திருமறையை நிலைநாட்டியபொழுது ஒவ்வொரு பெருஞ் சபைகளும் அங்குள்ளகிறிஸ்தவர்களுக்குள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர் (அப். நட 14:23, 2. திமோ. 2. 2). அப்போஸ்தலர் வழிவந்தவர்களும் அவ்வாறே செய்தனர். பல நூற்றூண்டுகளாக இவ்வழக்கம் நீடித்தது. 16-ம் நூற்றூண்டிற்குப்பின் எக்காரணத்தையோ முன்னிட்டு மறை பரப்புப் பணியாளர்கள் இந்தப் பாரம்பரிய வழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். இவர்களுடையபோக்கைத் திருச்சபை துளியும் ஆதரிக்கவில்லை. விசுவாசப் பரம்புதல் சபையின் விளக்கங்களையும் 13ஆம் சிங்கராயர், 15ஆம் ஆசீர்வாதப்பர், 11ஆம் பத்திநாதர், 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர் ஆகிய தந்தையர்களின் மறை பரப்புச் சுற்றுமடல்களையும் வாசித்தால் இவ்வுண்மை புலப்படும்.

## சங்கம் கூறுகிறது

சொந்தக் குருகுலம் எங்கும் மென்மேலும் வளரவேண்டுமென்று சிறப்புவாய்ந்த பாப்பரசர்கள் இதுவரை ஊக்குவித்ததுபோல இன்று வத்திக்கான் சங்கம் அதன் முக்கியத்துவத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டியுள்ளது. சொந்தக் குரு

(தொடர்ச்சி …)

# ஐந்து நிமிடங்கள் தாமதித்…

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைதியாய் இருங்கள்" என்று பதிலிறுத்தடாக்ரர் என்றுமில்லாவகையில் மனங்குழம்பியவராய்ச் சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம தனது அறையை நோக்கி அமைதியாக நடந்தார்.

தனிமையிலே மேசைமீது முகத்தைப் புதைத்தவண்ணம் நடந்தவை யாவற்றையும் ஒவ்வொன்றாகத் தன் மனக்கண் முன் கொண்டுவந்த டாக்டருக்கு அங்கு கவலையுறும் இளம்பெண்ணுடன் தனிமையில்ஏதோ பேசவேண்டும்போலிருந்தது. அவளது அழகுத் தோற்றமும், இரக்கமுமகலந்த வார்த்தைகளும மனத்திரையிலே திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தன. தனது பொறுமையைச் சகிக்கமுடியாது மறுபடியும் 3-ம்அறையை நோக்கிப் புறப்பட்டார். அவர் புறப்படுவதற்கும் அந்த இளம்நங்கை அறைவாயிலணடை வருவதற்கும் சரியாகவிருந்தது. இருவிழிகளும் ஒன்றையொன்று சந்தித்தன. "டாக்றர் எனது தாயார் விரைவில் குணமடைவாரா? நீங்கள் குணப்படுத்துவீர்களா? இல்லாவிட்டால்………" என்று தனது இதழ்களை விரித்துக் கிளிபோலமொழிந்தாள். டாக்றருக்கு என்னகூறுவதென்றே தெரியவில்லை. ஏனெனில் நோயாளியின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது "டாக்றர் ஏன் மௌனியாகிவிட்டீர்கள்? எனது அன்னைக்கு இந்த அவனியில் இனி இடமே கிடையாதா? யான் இன்றும் அனுதை என்றும் அநாதைதான்" என்று விம்மத் தொடங்கினள் அந்த மங்கை. "எதற்காக அப்படிக் கூறினீர்கள்? சற்றுமுன் தந்தையை இழந்தவர் என்றீர்களே, நிசம்தானு. சோதரர்கள் இல்லையா?" என்று கேள்விக்கணை தொடுத்தார் யேசுதாசன். "டாக்றர் நீங்கள் என் சோகவரலாற்றைக் கேட்பீர்களேயானுல்… எனது நிலையில் இன்று உங்களுக்கு ஒரு தங்கை இருந்தால்……" என்று கூறியவள், ஆரம்பித்தாள் தன் சோகவரலாற்றை. "நான் இந்துமதத்தைச் சேர்ந்தவள். உடன்பிறந்த அண்ணர் இருவர். இளையவர் விபத்தொன்றில் சிக்கி இறந்துவிட்டார். மூத்தவர் இந்துமதத்தைக் கைவிட்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவிக்கொண்டார். அதனுல அப்பாவின் கோபத்திற்கு ஆளாகி வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். அன்று போனவர் இன்றுவரையும் திரும்பவேயில்லை. அவர் முகஉருவம் எனக்குத் தெரியாது. அந்நேரத்தில்நான் தவழுங் குழந்தையாக இருந்தேன். அப்பாவும் இறந்து மூன்று வருடங்களாகி விட்டன. எல்லோரையும் பிரிந்தபின் தனது மூத்த புதல்வனைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர் என் அன்னை. சிந்தனையின் காரணமாகவே அவர் நோய்க்கு ஆளாகினர். அண்ணனை இப்பொழுதே காண்பாரேயாகில் அச்சணமே குணமடைவாவென்பது எனது நம்பிக்கை. அதற்கு யான் என்செய்வேன்? அண்ணர் இருக்கின்றாரா இல்லையா என்பதுகூடத் தெரியாது" என்று கூறிமுடிப்பதற்குள், "ஆ, அமுதா! நீயா என்முன் நிற்பது. உன் அண்ணர் இருக்கின்றார்; நிசமாக இருக்கின்றார். அனுல், சிவாவாக அல்ல; டாக்றர் யேசுதாசனுக இருக்கின்றார்" என்று கூறியபடி தன் தங்கையை ஆரத்தழுவி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். இழந்துபோன அண்ணர் நான்தான் என்று அறிமுகஞ் செய்தார்.

"இப்பொழுதே அன்னைக்கு உயிர்ப்பிச்சை அளிப்போம்" என்று கூறிக்கொண்டே இருவரும ஓடினர் 3ஆம் நம்பர் அறையை நோக்கி. அங்கு கண்டகாட்சி அன்னையின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது. ஐந்து நிமிடங்களாவது தாமதித்து அந்தஉயிர் பிரிந்திருந்தால்……

## காவலன் அபிமானி காலமானர்

இளவாலை சென் யேம்ஸ் பங்கைச் சேர்ந்தவரும், காவலனின் நீண்டநாள் வாசகருமான திரு. பேதுரு அந்தோனி என்பவர் லொறி விபத்தொன்றில் சிக்கி மரணமானுர். இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். ஆன்மா சாந்தியடைவதாக.


வெளிவந்துவிட்டது!
விற்பனையாகிறது!!

3ஆம் வகுப்புக்கான
கத்தோலிக்க மறைக்கல்வி
தமிழ்ப்பாட நூல்

நமது வழித் தொடர்ச்சி
( 2ஆம்பாகம் )
(நம்மில் யேசுவின் சீவியம்)

கிடைக்குமிடம்;
புனித சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



லூக்காஸ் சுவிசேஷக் கைத்துணை
என்னும் நூல்
வெளிவந்துள்ளது
G. C. E. (Ord. Lev) மாணவர்களுக்கு
மிக உபயோகமானது
விலை ரூபா 1.00.

கிடைக்குமிடம் :—
புனித சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்,
* * *
கத்தோலிக்க நடுநிலையம்,
அதி மேற்றிராணியார் இல்லம்.
கொழும்பு 8.
* * *
திருக்குடும்ப ஆங்கிலப்பாடசாலை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரோரா, யே. ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

(தொடர்ச்சி)

சில காலமாகக் கிறீஸ்தவ மதத்தைப்பற்றி நன்கு கேள்விப்பட்டிருந்த கரை நாட்டு மக்களை மனந்திருப்பும் விடயத்தில் ஆரம்பகாலத்திலிருந்ததைப்போன்ற கஷ்டங்கள் இருக்கவில்லை. மனந் திருப்பும் வேலைகள் நடைபெற்ற நேரத்தில் கிறீஸ்தவ மிஷனரிகள் இந்த நாட்டு மக்களுக்கு நன்கு பரிச்சயமான மொழியில் தங்குதடையின்றித் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறக்கூடிய நிலையிலிருந்தனர். அரசனையும் அவனைச் சார்ந்த பிரதானிகளையும் கண்டுபாவித்து நடக்கவேண்டிய நிலையும் அப்போதிருக்கவில்லை. போர்த்துக்கீசர்களின் துர் நடத்தைதான் மிகப்பெரிய இடையூறாகவிருந்தது. போர்த்துக்கீசர்காலத்தில் அராஜகமும், பதவிமோகமும், எதேச்சாதிகாரமும் தாண்டவமாடின. மனந்திரும்பிய மன்னனைக்கூட இவர்கள் அலட்சியம் செய்ததுமல்லாமல், இறைவனின் கட்டளைகளையும் அவமதித்தும் வந்தனர். இவைகளைக் கண்ட மக்கள் கிறீஸ்தவ மதத்தின்மீது வெறுப்புக் கொள்ளத் தொடங்கினர். தாங்கள் உதவியளிப்பதாகவிருந்தால் மனந்திரும்ப வேண்டுமெனப் போர்த்துக்கேயர்கள் மன்னனுக்கு நிபந்தனை விதித்திருந்தனர். இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு மன்னன் மனந்திரும்பியபடியினாற்றான் இந்நாட்டில் அந்நியஆட்சி ஏற்பட்டது. லிஸ்பன் நகரத்தில் போர்த்துக்கல் நாட்டை ஆட்சி செய்த 3-ம் ஜோண் மன்னனால் சிலை வடிவில் வைத்து முடி சூட்டப்பட்ட இம்மன்னனைப் பாதுகாப்பதற்கு போர்த்துக்கேய அதிகாரிகள் போதிய படைபலம் கொடுக்காதிருந்தனர். மாயாதுன்னை மன்னனிடமிருந்து தப்புவதாகவிருந்தால் அதற்கு மருந்து, புதிய மதத்தைக் கை விடுவதுதானென்றும் அதேநேரத்தில் போர்த்துக்கீசர்களின் அட்டூழியங்களிலிருந்து அகலவேண்டுமானால் கத்தோலிக்கசமயத்தை உண்மையான முறையில் ஏற்றுக்கொள்வதே சாலச் சிறந்ததெனவும் மக்கள் சிந்திக்கத் தொடங்கினர்.

மாயாதுன்னையும் அவனது மகனும் இறந்தபின்னர் மக்கள் பெருமளவில் கிறீஸ்தவர்களாக மாறினர். தனது குடிமக்கள் கிறீஸ்தவர்களாக மாறுவதைக் கண்ட கோட்டைராச்சிய மன்னன் பெரு மகிழ்வு கொண்டான். ஆங்காங்கே மிசாம் பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டன. பௌத்த கோவில்களுக்கு நன்கொடையாக்கப்பட்ட காணி பூமிகளையெல்லாம் அரசன் பிரான்சிஸ்கன் சபைக் குருக்களுக்கு மாற்றம் செய்தான். தனக்குப் பிள்ளை இல்லாதபடியினால் தனது இராச்சியம் சிங்களச் சட்ட முறைப்படி கிறிஸ்தவரல்லாத ஓர் அரசனுக்குச் சேருமெனக் கண்டு பயமடைந்த இந்த அரசன் போர்த்துக்கேயர்களின் வேண்டுகோளின்படி தனது இராச்சியத்தை உரிமைச்சாசனத்தின் மூலம் போர்த்துக்கேய அரசனுக்குக் கையளித்தான். பிரான்சிஸ்கன் சபைக் குருமாரும் இக்கூற்றை உறுதிப்படுத்திப்பதாக நம்பப்படுகிறது.

1597-ம் ஆண்டில் தொன் சுவான் பெரிய பந்தர் என்ற அரசன்இறந்ததும் போர்த்துக்கேய அரசன் இலங்கை அரசனாகப் பிரகடனம் செய்யப்பட்டான். சிங்கள மக்கள் மத்தியில் வழங்கிவந்த சட்டதிட்டங்களையெல்லாம் நீக்கி அதற்குப் பதிலாகப் போர்த்துக்கேய நாட்டுச் சட்டதிட்டங்களைப் புகுத்தி, இலங்கையை ஓர் புதிய போர்த்துக்கல் நாடாக மாற்ற வேண்டுமெனப் போர்த்துக்கீசர் திட்டமிட்டிருந்தனர். இத்தகைய மாற்றத்திற்கு எதிரான முறையில் மக்களின் போக்கு இருக்கிறதென்பதைக் கண்ட போர்த்துக்கேய தளபதி இதுபற்றி ஆராய்வதற்காக ஒவ்வொரு பகுதியிலுமிருந்து பிரதிநிதிகளை அழைப்பித்து மகாநாடு கூட்டுவதே சிறந்த வழியெனக் கருதினான். இதுவே மல்வானை என்ற பகுதியில் முதன்முதலாகக் கூடிய பிரபுக்கள் சபையும், கோட்டை இராச்சிய காமன்ஸ் சபையுமாகும். இம் மகாநாட்டில் சமுகமளித்திருந்த பிரதிநிதிகளிற் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்களாயிருந்தனர். இவர்கள் பௌத்தமதம் நீங்கலாகச் சிங்களச் சட்டதிட்டங்களுக்காகவே வாதாடி நின்றனர். இவர்கள் தாமாகவே கிறீஸ்தவர்களானபடியினால் தங்கள் இனசனர்களும் கிறீஸ்தவர்களாக மாறவேண்டுமென ஆர்வம் கொண்டிருந்த போதிலும் போர்த்துக்கீசர் தமது ஆர்வத்தினிமித்தம் கையாண்டிருந்திருக்கக்கூடிய பலாத்கார முறைகளை ஆட்சேபித்தனர்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தியிருந்தால் போர்த்துக்கீசர் இந்த நாட்டைக் கிறிஸ்தவமயமாக்கியிருக்கலாம். போர்த்துக்கீசர்களோ கத்தோலிக்க விசுவாசத்தைப் பரப்புவதில் தங்களுக்கும் கடமையிருக்கிறதென்பதை உணராது கபோதிகளாக வாழ்ந்துவந்தனர். இலங்கையின் சட்டதிட்டங்கள் பாதுகாக்கப்படுமெனப் போர்த்துக்கீச அரசனின்பெயரால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை இவர்கள் நிறைவேற்றித் தமக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்திருந்தால் குறுகிய காலத்திலேயே இலங்கை ஓர் கத்தோலிக்க நாடாக மாறியிருக்கும். அத்துடன் இலங்கையில் வாழ்ந்த போர்த்துக்கீசர்களின் சரித்திரமும் வேறுவிதமாக எழுதப்பட்டிருந்திருக்கும். கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கீசர்களின் ஆட்சி சரியான முறையில் நிலைநாட்டப்பட்டிருந்தது. அப்படியிருக்கையில் நாடு முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற அவாவினால் குறிப்பாக மலை நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையினால் பகட்டான திட்டங்கள் தீட்டி, பதவி வெறி பிடித்து, கடவுளின் கட்டளைகளை அவமதித்து, அறநெறிக்கு மாறான முறையில் போர்த்துக்கீசர்கள் ஆட்சிபுரிந்து வந்தமையினால், கத்தோலிக்கர்களும் கத்தோலிக்கரல்லாதாரும் தங்கள்மீது கொண்டிருந்த அனுதாபத்தையும் இழந்தனர்.

போர்த்துக்கீசர் இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப்படும் வரைக்கும் இவர்களுக்கெதிரான கிளர்ச்சிகளுக்குக் கத்தோலிக்கர்களும் பல முறைகளில் தலைமை தாங்கினர். இதன்காரணமாக போர்த்துக்கீசர்களுக்குச் சொந்தமானவைகள் யாவும் கிளர்ச்சிக்காரர்களால் தவிடுபொடியாக்கப்பட்டன. இவர்களது நெறிகெட்ட நிர்வாகத்திற்கெதிராகக் கிளர்ச்சிகள் நடைபெற்றுவந்தபோதிலும், குருக்களுக்கும் கோவில்களுக்கும் கிளர்ச்சிக்காரர்களால்— அதுவும் கத்தோலிக்கரல்லாத கிளர்ச்சிக்காரர்களால் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. இறை நம்பிக்கையற்ற போர்த்துக்கீசர்கள் அநேகமாகத் தம்மை மதத்துடன் சார்புபடுத்திவந்ததைப் போலவே சில வேளைகளில் கத்தோலிக்க கிளர்ச்சிக்காரர்கள்கூட தமக்குக் கொடுமையிழைத்தவர்கள் மீது கொண்ட வன்மத்தினிமித்தம் திருச்சபைக்கும் திருச்சபையின் இலட்சியத்திற்கும் தீங்கிழைத்து வந்தனர்.

தமது சொந்த நாட்டில் நீதி நியாயமெனக் கருதப்பட்ட ஆர்வமிக்க தேசியஉணர்ச்சிகளால் மக்களின் மத நம்பிக்கை நிலைபெயரக்கூடிய கட்டத்திலிருந்ததென்ற கசப்பான உண்மையை உங்களுக்கு நினைவூட்டவேண்டிய அவசியம்எனக்கேற்படவில்லை. பிற சாதியார் முதலாவதாக மோயீசனுடைய சட்டப்பிரமாணங்களை ஏற்று யூதர்களாக மாறினாற்றான் அவர்கள் கிறீஸ்தவர்களாகக் கருதப்படுவரென்ற நிலை ஆரம்பகாலத்தில் யூதர்கள் மத்தியில் நிலவிவந்ததைப்போலவே இலங்கை மக்களும் போர்த்துக்கேய பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டு போர்த்துக்கேயர்களாக மாறினாற்றான் கிறீஸ்தவர்களாகக் கணிக்கப்படுவரென்ற கருத்து போர்த்துக்கீசர் மத்தியிலும் நிலவிவந்தது. போர்த்துக்கீசர்களில் அநேகர் செய்துவந்ததைப்பின்பற்றி கத்தோலிக்க மிஷனரிகள்கூட நமதுதேசிய கலாச்சாரத்தின்மீது வைத்த பற்றின் காரணமாக அவர்களின் கலாச்சாரத்தைக் கிறீஸ்தவ மதத்தின் பெயரால் மக்கள்மீது திணிக்கமுற்பட்டனர். போர்த்துக்கீசர்களும் தமது சொந்த தேசிய நலன்களுக்காகவே கிறிஸ்தவ மதத்தைப் பாவித்தனர்போற் காணப்பட்டனர். இதனால் இவர்கள் மீது வெறுப்புக்கொண்ட சிங்களக் கிறீஸ்தவர்கள் கிறீஸ்தவ மதத்திற்கு மாறான செயல்களிலீடுபடத் தொடங்கினர். கிறீஸ்தவ மதத்திற்குத் தீங்கேற்படாத முறையில் போர்த்துக்கேயர்களுக்கெதிராகப் போர்பொருதுவதாயிருந்தால் சாந்தகுணமும் தன்னம்பிக்கையும் பெருமளவில் தேவைப்பட்டன. இதனிமித்தம் சுவிசேஷ போதனையைத் தொடர்ந்து நடத்த முடியாததோர் நிலை ஏற்பட்டது.

இதற் கெடுத்துக்காட்டாக விளங்கியவர் அக்காலத்தில் மிகப் பிரபல்யம் பெற்றிருந்த சிங்களக் கவிஞரான திரு. அழகியவண்ண மொகத்தலா என்பவரேயாவார். இவர் சீதவாக்கையை ஆண்ட இராசசிங்கனை ஆதரித்துவந்தார். சீதவாக்கை இராச்சியம் வீழ்ச்சியுற்று அரசனிறந்ததும் இவர் போர்த்துக்கீச குடிமகனாக மாறி, கிறீஸ்தவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். புதிய ஏற்பாட்டை நன்றாக ஆராய்ந்து படித்ததுமல்லாமல், யேசுசபைக் குருமாருடன் வாதப்பிரதிவாதங்கள் நடத்தி இறுதியில் ஞானஸ்நானமும் பெற்றார். போர்த்துக்கேய மன்னன் 'தோம்புகள்' எனப்படும் காணிப் பதிவேடுகளைத் தயாரிக்கும் பொறுப்பை அக்காலத்தில் இவரிடமே ஒப்படைத்திருந்தான். போர்த்துக்கேயர்கள் மட்டுமன்றி குருமார்கள்கூட கிறீஸ்தவ கோட்பாடுகளுக்கிசைய நடந்துகொள்ளவில்லையென்பது இவரது கருத்தாகும். இவர் கிறீஸ்தவமதத்தில் உண்மையான நம்பிக்கை வைத்து நாட்டு மக்களைக் கிறிஸ்துவின் பட்டியில் சேர்ப்பதற்கு அயராது உழைத்துவந்தார்.

(வளரும்)

# சொந்தக் குருகுலம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குலத்திற்குக் குருத்துவ பயிற்சி சிறப்பாய் அளிக்கப்படுவதுடன், சங்கப் பேரவையில் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் இளங் கிறிஸ்தவ சபைகளில் ஒழுங்காக அனுசரிக்கப்படுவதை விரும்புகிறது. இன்று நாம்வாழும்காலநிலையை மறந்துவிடக்கூடாது. ஆண்டு பல்லாண்டுகளாகப் பின்பற்றப்பட்ட பாரம்பரிய கோட்பாடுகளும் மதிப்புகளும் எளிதில் மறுக்கப்படுகின்றன. கருத்துகள் துரிதமாய் மாறிவரும் இக்காலத்தில் நம் குருக்களுக்கு உறுதியான நிலைத்த அறிவாற்றல் அவசியம். போலியிலிருந்து உண்மையைப் பிரித்துணரும் விவேகமும் உண்மை விசுவாசத்தை இறைமக்களிடையே தளராது காக்கும் சாதுர்யமும் இன்றியமையாதவை. சொந்தக் குருகுலத்தின் வளர்ச்சிக்காக சங்கம் வரைந்துள்ள கோட்பாடுகள் யாவும் சீரிய கருத்துள்ளவை, வரவேற்கத்தக்கவை என்பதற்கு ஐயமில்லை. "குருத்துவப் பயிற்சி அந்தந்த வட்டாரத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டதாய் இருக்கவேண்டும். தம் சொந்த மக்களின் தனிப்பட்ட சமூக, பொருளாதார பண்பாட்டு நிலைகளைக் குருமாணவர்கள் கண்டுணர வேண்டும். குருமாணவர்கள் கூடுமானவரை தம் தம் சொந்த நாட்டிலேயே இருந்து நம்நாட்டவரின் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு குருத்துவக்கல்வி பெறவேண்டும். குருத்துவப்பயிற்சியில் தக்க அளவு செயல்முறை பயிற்சி பங்குபெறவேண்டும். அத்துடன் பொறுப்புள்ள இறைபணியும் ஓரளவு அளிக்கலாம். இன்று கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் துரிதமாய் முன்னேறி வருகின்றது. எனவே குருமாணவர்கள் கிறிஸ்துவ ஒன்றிப்பு உணர்வில் பயிற்சிபெற்று ஏனைய கிறிஸ்தவர்களுடன் சகோதர அன்புடன் உரையாடத் தகுந்த வழிவசதிகள் அமைத்தளிக்கப்படவேண்டும் (திருமறை பரப்புப் பணி, எண் 16).

### ஒத்துழைப்போம் வாரீர்

சொந்தக் குருகுலத்தின் வளர்ச்சியை மாநில ஆயரின் பொறுப்பில் விட்டுவிடலாம் என்பது முறையன்று. இன்று திருச்சபையில் எத்திசை நோக்கினாலும் 'உடன் பொறுப்பு' என்பதே பேச்சு. எனவே சொந்தக் குருகுல வளர்ச்சியில் எவ்வளவு தூரம் ஒத்துழைக்க முடியும் என்பதைப் பொதுநிலையினர் ஆராய்ந்து ஆலோசிக்க வேண்டும். ஒருசில நாடுகளில் குருத்துவ அழைத்தலுக்குத் தேர்ந்தெடுக்கும் பணியைப் பொதுநிலையினர் பொறுப்புடன் கண்காணித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும் நேரிடையாக எளிய மாணவர்களுக்குக் குருத்துவப் பயிற்சியில் பொருளாதார உதவி புரியலாம். மேற்கொண்டு மற்றவகையில் உதவுவது தாராள கிறிஸ்தவர்களின் சூழ்நிலையைப் பொறுத்தது. தூயஆவியின் ஏவுதல் முறையற்ற உதவி முயற்சிகளைத் தவிர்க்கும். எனவே ஒருமனதாக இந்த ஒப்பற்ற குறிக்கோளுக்கு நம்மாலானதைச் செய்வோம். இச் சீரிய பணியில் நம் பொறுப்புணர்வைத் தூண்டப் பரிசுத்த தந்தை பதினோராம் பத்திநாதர் கத்தோலிக்கக் குருத்துவம்பற்றி அருளிய கருத்தொன்றை நம் மனக்கண்முன் கொணர்வதே போதும். "கடவுளுக்கோ அல்லது திருச்சபைக்கோ நீங்கள் எப்பெரும் காரியம் செய்ய முற்பட்டபோதிலும் உத்தம குருக்களை உருவாக்குவதைவிட மேலான செயல் இல்லை என்பதை நீங்கள் கண்டுணர வேண்டும். ஏனெனில் உண்மையில் இறைவனுக்கு மிகப் பிரியமானதும், திருச்சபைக்கு மேலான மகிமை கொணர்வதும் ஆன்மாக்களுக்கு அதிக பயனுள்ளதுமான வேறொன்றுமே இல்லை."

சேசுநாதருடைய திரு இருதயத் தூதன்.

### நன்றியறிந்த தோத்திரங்கள்

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் மன்றாட்டால் எனது வருத்தம் குணமடைந்தது. நன்றியறிதலாக இதைப் பிரசுரித்து, காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோருகின்றேன்.

அடியாள், ஏ. எஸ். ஏ.
யாழ்ப்பாணம்

* * *

யேசுவின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதா ததேயு, அர்ச். அந்தோனியார், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும், நான் கேட்ட காரியங்கள் அனுகூலமானதற்கு நன்றிகூறி, பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகின்றேன். ஓர் அடியாள்.
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்து நிமிடங்கள் தாமதித்திருந்தால்....!

(செல்வி யசிந்தா ஜெயருணி இராசரத்தினம்— மாதகல்)

பண்டையகால அரசர்களின் தலைநகராகவும், இந்துக்களின் உறைவிடமாகவும் விளங்கி இன்றும் சைவமதத்திலே தலைத்தோங்கி இருப்பது 'நல்லூர்' என்னும் பொன்னூராகும். இந்த ஊரிலேதான் பாழுங்குடிசையிலே வாழ்ந்து, வறுமைத்தாயின் மடியிலே தவழ்ந்து கொண்டிருந்தது 'முருகன்' என்னும் ஒரு சாதாரண தொழிலாளியின் குடும்பம். பஞ்சத்தால் வாடினாலும் பரமனைவழிபட மறக்கவில்லை. முருகனுக்கு மூத்தபுதல்வனாக உதித்தான் 'சிவா.' அடுத்தவன் 'நாதன்.' ஏகபுத்திரியாக உதித்தாள் 'அமுதா.' தந்தை முருகனினதும், தாய் புனிதத்தினதும் அரவணைப்பில் பிள்ளைகள் மூவரும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தனர். மூத்தவன் சிவா பள்ளி மாணவனானன். தந்தை சிவாவின் எதிர்காலத்தை அன்றே அறிந்திருந்தால் பாடசாலைக்கு அனுப்பியிருப்பாரென்பது நடக்காததொன்று.

வருடங்கள்பல உருண்டோடின. சிவா எப்பொழுதும் பாடசாலைக்கு ஒழுங்காகவே சென்று கொண்டிருந்தான். கல்வியில் மாத்திரமல்ல ஒழுக்கத்திலும் சிறந்துவிளங்கினான். நாள்தோறும் பாடசாலைக்குச் செல்லும்வழியில் ஒரு கத்தோலிக்க தேவாலயத்தைக் கடந்து சென்றுகொண்டே வந்தான். அன்று ஏனே அவன் உள்ளம் அத்தேவாலயத்துள் நுழைந்து அங்கு என்ன இருக்கின்றது என்று அறிய ஆவலுற்றது. நுழைந்தான் ஆலயத்துள். தன் இரு விழிகளையும் அகல விரித்து எதையோ உற்று நோக்கினான். அங்கே அவனைக் கவர்ந்தது எதுவுமல்ல. இரத்தம் சொட்டச் சொட்ட இரு கரங்களையும் நீட்டி மூன்று ஆணியிலே தொங்கிக் கொண்டிருந்த கிறீஸ்துவின் பாடுபட்ட திருச்சிலுவையே யாகும். "ஆ! ஏன் இந்தக் கோலம்? என்ன கொடூரமான காட்சி!" என்று தன்னையறியாமலே வாய் பிதற்றிக் கண்ணீர் சிந்தினான். இந்த மனிதர் யாராக இருக்கலாம்? இவருக்கு ஏன் இக்கதி நேரிட்டது என்று அறியவேண்டுமென்று ஆசைகொண்டான். வெளியேற மனமின்றி அரைமனதுடன் ஆலயத்தை விட்டகன்றான். அன்று முழுவதும் நிம்மதியின்றிக் கவலையுடன் காணப்பட்டான். நாடினான் ஓர் உத்தம கத்தோலிக்க நண்பனை. கூறினான் தனது மனக் கவலையை. மனத்தினில் எழுந்த அத்தனை கேள்விகட்கும் தக்கபதில் தெரிந்துகொண்டான். அன்று மாலையும் — இல்லை, நாள்தோறும் அந்த ஆலயத்துள் நுழைந்து அன்பரின் அருளை வேண்டிவந்தான்.

தானும் ஒரு கிறீஸ்தவனாக ஏன் மாறக்கூடாது என்று எண்ணினான். இந்த எண்ணம் அவன் உள்ளத்தில் என்று உதித்ததோ அன்றே அவன் வாழ்க்கையில் கொந்தளிப்பும், புயலும் உதயமாயிற்று. நாளுக்குநாள் தன் வாழ்க்கையையே மாற்றியமைத்தான். சிறந்த கத்தோலிக்க நண்பர்களின் உதவியை நாடினான். அவர்கள் மூலமாகக் குருவானவர் ஒருவரின் அன்பையும் ஆதரவையும் பெற்றான். கத்தோலிக்கனாக — இல்லை, அந்தச் சிலுவையிற் தொங்கிய உத்தமரின் பாதையிற் செல்பவனாக மாறுவதற்குத் தன்னை ஆயத்தம் செய்தான்.

உலகவாழ்க்கை ஒரு போர்முனை என்பதைச் சிவா எதிர்காலத்திற்றான் சரியாக உணரப்போகின்றான். சிவாவின் போக்கைக்கண்ட பெற்றோர் கொதித்தெழுந்தனர். பெற்றவர்களாயிருந்தாலும் சைவ மதம்என்னும் விதையிலிருந்து முளைத்தவர்களல்லவா! எதை வெறுத்தாலும் பிறந்த மதத்தை வெறுக்க எந்தப் பெற்றோர்தான் மனம் பொறுப்பர். சிவா நிச்சயம் கத்தோலிக்கனாக மாறப்போகின்றான் என்ற செய்தி தந்தை முருகனின் காதுகளுக்கு எட்டிவிட்டது. கொந்தளிக்கும் கடலானார். குமுறினார், அடித்தார், உதைத்தார்; ஈற்றில் வீட்டைவிட்டே விரட்டினார். ஆனால் அவன் எதற்கும் அஞ்சவில்லை. எல்லாவற்றையும் துறந்து எதற்கும் மேலாகத் தம்பியையும், தவழ்ந்து விளையாடும் தங்கை அமுதாவையும் பிரிந்து "சிவா இனி சிவாவாகவேவாழமாட்டான்" என்று கூறித் தன் பிறந்தவீட்டைவிட்டு, வளர்ந்த ஊரைவிட்டுப் புறப்பட்டான்.

குருவானவர் ஒருவரின் இல்லமேதஞ்சமென் றுணர்ந்தான். அக்குரவர் மூலமாகக் கத்தோலிக்க கல்லூரியொன்றில் சேர்ந்து அந்த விடுதியையே தன் இல்லிடமாகக் கொண்டான். ஒருசில மாதங்களின்பின் 'யேசுதாசன்' என்னும் பெயருடன் ஞானதீட்சையும் பெற்றான். தன் பிறந்தகத்தைப் பற்றிய நினைவு அவன் உள்ளத்தில் எழுந்தாலும் அதைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை. ஆனால் தங்கை அமுதாவைப் பற்றித்தான் அதிகம் சிந்திப்பான். யேசுதாசன் சிந்தித்தாலும் பெற்றோர்கள் அவன் நினைவே இல்லாதொழிந்தனர்.

மாதங்கள் பல மறைந்தன. வருடங்கள் பல உருண்டன. காலங்கள் பல கடந்தன. அன்று தவழ்ந்த குழந்தை இன்று பருவமலராகப் பூத்து நிற்கும் காலம். இன்று யேசுதாசன் சாதாரண மனிதனல்ல. வைத்தியக் கல்லூரியில் முதற்பிரிவிற் சித்தியடைந்து மக்களிடையே பணிபுரிய வந்திருக்கும் ஓர் அரசாங்க வைத்தியன், டாக்டர் யேசுதாசன் எதற்காகத் தனது பெற்றோரைக்காண ஆவலுற்றானோ தெரியாது நல்லூரை நோக்கிப் பறந்தது அவரது மோட்டோர் கார்.

எதிர்நோக்கியிருக்கும் பேரிடியை ஏற்கனவே அறிந்திருப்பாரேயாகில்........ பருத்து வளர்ந்திருந்த அந்தப் புளியமரம், காய்த்துக் குலைகுலையாகத் தொங்கும் மாமமரம், நான்குபுறமும் சுற்றிவர நாட்டப்பட்டிருந்த பூவரசமரம் இவை அனைத்தும் பாட்டனாரால் தனது தாயாருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட காணி அதுதான் என்பதைச் சற்றும் தாமதமின்றி உணர்த்தின. ஆனல் அங்கு இடிந்து மண்ணோடு மண்ணாகப்போன மண்குடிசை, கவனிப்பாரற்றுக் கறையானுக்கு இரையாகியிருக்கும் கிடுகுவேலிகள் யேசுதாசனின் உள்ளத்தில் சந்தேகத்தைத் தோற்றுவித்தன. அண்டை அயலவரை விசாரித்தார். "முருகன் இறந்துவிட்டார். அவரை இழந்த மனைவிமக்கள் இவ்வூரைவிட்டு வேறுஎங்கோசென்றுவிட்டார்கள்" என்று அவர்கள் மூலமாக அறியவந்த டாக்டர் துயரக்கடலில் ஆழ்ந்தார். தன்னை யாரென்றே காட்டிக்கொள்ளாமல் மன்னாரிலுள்ள தனது வைத்தியசாலையை நோக்கி மோட்டாரைச் செலுத்தினர்.

நாட்கள் சிலகடந்தன. என்றும்போல் அன்றும் டாக்டர் யேசுதாசனின் அறையை நோயாளிகள் முட்டிமோதி நின்றனர். களைப்பையும் பாராது, ஓய்வு ஒழிவின்றித் தனது கடமையிலே கண்ணாயிருந்தார். அவ்வேளை, "டாக்டர் டாக்டர் எனது அன்னைக்கு உயிர்ப்பிச்சை அளியுங்கள்" என்று ஓர் அவலக்குரல் டாக்டரின் காதுகளில் விழுந்தது. அச்சணமே சப்தம்வந்த திசையைநோக்கி ஓடினார். அங்கே அழகிய இளம் பெண்ஒருத்தி மயக்கமுற்ற தனது வயோதிபத்தாயை மார்பிலே தாங்கிய வண்ணம் காட்சியளித்தாள். எல்லா டாக்டர்களாலும் கைவிடப்பட்ட தனது அன்னையை இறுதியாக டாக்டர் யேசுதாசனிடம் அழைத்து வந்திருந்தாள். நோயாளி 3-ம்நம்பர் அறையில் அனுமதிக்கப் பட்டார். "டாக்டர், அன்னையின் உயிரைக் காப்பாற்றமாட்டீர்களா? ஏற்கனவே தந்தையைப் பிரிந்து அநாதையாய் இருக்கும் யான் தாயையும் இழந்தால்...... டாக்டர் எனதுநிலையில் இன்று நீங்கள் இருந்தால் ......" என்று வாயில்வந்தபடி பலவற்றையும் கூறி அழுதாள். அவளது கண்ணீர் யேசுதாசனின் உள்ளத்தை உருகச்செய்தது. அந்தவயோதிபப் பெண்ணுக்குச் செய்யவேண்டிய வைத்திய உதவிகளைச் செய்தார். ஒருவாறு மயக்கம் தெளிந்து கண்களைத்திறந்த அந்த வயோதிபமாதின் எதிரில் நின்றவர் டாக்டர் யேசுதாசன் தான். ஏனே திறந்த விழிகளை அகல விரித்து உற்றுநோக்கினாள்; கண்ணீர் வடித்தாள். "மகள் பாதுகாப்பாக உங்கள் [illegible]

([illegible])

## இந்தியாவில் தொலைக்காட்சி

காட்டுப்புறச் சிற்றூர்களிலுள்ள மக்களும் தொலைக் காட்சியைக் கண்டுகளிக்க இந்தியா முயற்சி எடுத்து வருகிறது. அதன்படி 1972-இல் அமெரிக்கா செலுத்த இருக்கும், தகவல் தொடர்புச் செயற்கைக் கோள் ஒன்றைச் சோதனை முறையில் பயன்படுத்தும் என்று அமெரிக்கத்தூதர் கீட்டிங் கூறியிருக்கிறர்.

●

## வெள்ளரிப் பிஞ்சு

ஒரு வெள்ளரிப் பிஞ்சில் சோடியம், கல்சியம், மெக்னீசியம், ஃபாஸ்பரம், குளோரைட், சல்ஃபா, இரும்பு ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன. இதில் உள்ள சோடியம்தான் குளிர்ச்சியைத் தருகின்றது. இதில் ஏ விட்டமின் குறைந்த அளவிலும், பி. சி விட்டமின்கள் நிறைந்த அளவிலும் உள்ளன. மகோதரம், வாத ரோகம் இவைகளை இதுதீர்க்கவல்லது. தோலை சீவாமல் காயைஉண்ண வேண்டும். நாள்தோறும் சிறுதுண்டு வெள்ளரிப்பிஞ்சு சாப்பிடுங்கள். நோயின்றி வாழுங்கள்.

●

## காப்பி விரும்பிகள் கவனிக்க

காப்பியிலுள்ள காஃபீனுடன் சர்க்கரை சேரும்போது உடல் மிகவும் பாதிக்கப்படுவதாகவும், மிகவும் இனிப்பான காப்பி தூக்கத்துக்கு எதிரி, இருதயத்துக்கு எமன், என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பாலுடன் அளவான சர்க்கரை சேர்ந்த காப்பியினால் ஆபத்து இல்லை. எஸ்ஸன்ஸ் காப்பி நம் உடலில் நிக்கோடின் நஞ்சை அதிகரிக்கிறது. காப்பி சாப்பிட்டவுடன் சுருட்டு, சிகரெட்டு புகைப்பது உடல்நலத்தைப் பாதிக்கும்.

---

சில்லாலை

### நன் மரண ஞாபகம்

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்"

ஆசிரியை ரோசமுத்து விருசுப்பிள்ளை அவர்கள் அமரத்துவமடைந்த 5-வது வருட நிறைவு தினம் 15-5-70.

தந்தை விருசுப்பிள்ளை அவர்களின் 6-வது வருட நிறைவு தினம் 21-12-70.

தாய் ஔறேலியா அவர்களின் 7-வது வருட நிறைவு தினம் 16-6-70.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக வரும் 15-5-70 அன்று காலை சில்லாலை ஆரோக்கிய நாயகி ஆலயத்தில் பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வணக்கத்துக்குரிய குரவர்களும், சபைக்குரிய கன்னியர்களும், சிநேகிதர்களும், மரியாயின் சேனையார் யாவரும் இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வி. ஏ.

---

பூமி அதிர்ச்சி ஏற்படுவதற்கு ஒரு சில மணிநேரம் முன்னமே, ஒருவகை மீன்கள் இதை உணருகின்றன. ஜப்பானியர் இவ்வகை மீன்களைத் தங்கள் வீடுகளில் வளர்க்கின்றனர். பூமி அதிர்ச்சி ஏற்படுவதை உணர்ந்த இம்மீன்கள் அது ஏற்படுவதற்குச் சில மணி நேரம் முன்னதாகவே வெகுவாகக் குதிக்கின்றனவாம். இதுவே ஏற்பட இருக்கும் பூமி அதிர்ச்சியின் முன் அடையாளம். இதைக் காணும் ஜப்பானியர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுவார்களாம்.

---

### வான் வீடு திரும்பிய 1-ம் வருட ஞாபகம்

**ஜெயசீலி பெர்னாந்து**

தோற்றம்: 2-4-1937 மறைவு: 15-5-1969

**ஜெபம்**

இரக்கத்தின் ஆண்டவரே, மகிமையின் மன்னரே! உமது திரு நாமத்தின் கீர்த்தியைக் குறித்து, உமது நீதிக்கொத்தபடி உமது சன்னதிக்கழைக்கப் பட்ட உம் அடியாள்

**ஜெயசீலி பெர்னாந்துக்கு**

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். இவள் மீது உமது இடையறாத இரக்கத்தை பனிபோல் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம், ஆமென். (1 பர. அரு. திரி.)

இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 15-5-70 வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறும் துக்கப்பாடற் பூசையைக் கண்டு ஒப்புக்கொடுக்க பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் பிரலாபிக்கும்

கணவன் — என்ட்று பெனி பெர்னாந்து. மக்கள் — ஜோசப் ப்ளசிட் பெர்னாந்து ஜோசப் மில்ரோய் பெர்னாந்து ஜோசப் டெரிக் பெர்னாந்து.

136, மேட்டுத்தெரு,
கொழும்பு.

---

அக்கினேஸ் சூசைப்பிள்ளை ஆசிரியை அவர்களின்

### 31-ம் நாள் மரண ஞாபகம்

பிறப்பு: 1884— ஆவணி 19
இறப்பு: 1970 — சித்திரை 16

அக்கினேஸ் சூசைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் இறைவனடிசேர்ந்த 31ஆம் நாள் எதிர்வரும் 16-5.70. அன்று காலை 6மணிக்கு ஏழாலை சந்தியோகுமையோர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்தும சாந்திக்காக ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் உறவினர், சிநேகிதர், பழையமாணவர் யாவரும் திவ்வியபூசையில் பங்குபற்றி, இவவின் ஆத்தும சாந்திக்காக மன்றாடும்படி தயவாகவேண்டுகிறோம்.

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஏழாலை 55-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்சுவாமி ஞானப்பிரகாசரும்

## தும்பளைக் கலாநிதி சிங்கராயர் தாவீது அடிகளும் இயற்றிய

# சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி

இப் புதிய—தமிழ்—ஆங்கில—தமிழ் அகராதி — சொற்பிறப்பியலையும் படிப்படியாய் மாற்றமடையுஞ் சொற்கருத்தியலையும் ஆராயும் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. இதனகத்து எமது பூர்வீக இலக்கியங்களில் காணப்படும் மிகப் பழைய சொல்லுருவங்களுடன்—தமிழ்சொற்கள் யாவும் தொடர்புபடுத்தப்படுதலின் மூலமாக அவற்றின் பகுதிகள் அன்றேல் மிகவும் ஆரம்பநிலையினவாகுஞ் சொல்லுருவங்களும் ஆராயப்படும். இங்ஙனமே தமிழ்ச்சொற்களை யாவரும் இலகுவில் அறியும்வணணம் தமிழ் மொழியினைப் பகுத்து விளக்கிதருகின்றனம். அத்துடன் மற்றப் பதினெண் திராவிட மொழிகளுடன்—சிறப்பாக, செப்பஞ் செய்யப்பெற்ற மலையாளம், கன்னடம், தெலுங்கு என்பனவற்றுடன் —தமிழ் மொழியின் ஒப்பு ஆராயப்படும்.

வடஐரோப்பாவில் உள்ள பின்லாந்து தேசம் முதல் வடகீழ் ஆசியாவில் உள்ள மொங்கோலியா தேசம் ஈறுகப்பரந்து கிடக்கும் பெரும் நிலப்பரப்பில் "சித்திய, ஸ்கிதிய, ஊரேலிய, பின்னோ—உக்ரிய" எனப் பல்வேறு விதம் அழைக்கப்படும் 42 மொழிகள் வழங்கப்பட்டன. மேற்கு ஆசியாவில் "அராபிய, எபிரேய, கல்தேய, அஸ்ஸீரிய, சீரிய, பபிலோனிய" மொழிகளும் இச்செமித்திய மொழிகள் அல்லாத "ஹிற்றையிற், மித்தன்னி, சுமேரிய" பாஷைகளும், ஐரோப்பாவின் பெரும்பான்மையான பாகத்திலும், ஈரான்— இந்தியாவிலும், 45 "இந்து — ஐரோப்பிய" மொழிகளும் பலநூற்றாண்டுகளாக வழங்கப்பெற்று வருகின்றன. இந்த 96மொழிகளுடனும் ஆதித்திராவிட மொழிக்குப் பல்வேறு தொடர்புகள் இருந்தனவென்றும், இதுவே ஏனையவற்றில் தோன்றும் பலசொற்களின் உண்மையான உற்பத்தியைக்காட்ட வல்லது என்றும் துலக்கமாகவும் தெளிவாகவும் இதனகத்தே மாந்தர் சிறப்பாகத்தமிழ் மக்கள், கண்டு இன்புறுவர்.

கலாநிதி ஏர்னெஸ்த் வஸ்ஸோர்ஸீகர் இயம்பிய "ஜேர்மனிய மொழியின் சொற்பிறப்பு இடலகராதி" என்னும் நூலைப் போல இவ்வகராதியும் தூய சொற்பிறப்பியலைமட்டுமே தழுவியதாகும். ஆதலால் இந்நூல் தமிழ்ச் சொற்களின் முதலாம் படிப்பகுதிகளையும் இரண்டாம்படியின் சொல்லுருவங்களையும் மட்டுமே ஆராயும். ஜேர்மனிய தொடர்ச் சொற்களைக் கசெலின் வெளியீடாகிய கார்ள்பிரூயில் இயம்பிய "ஜேர்மனிய — ஆங்கிலப் போகராதியில்" பார்த்தல் வேண்டும். அதற்குஒப்பதமிழ்த் தொடர்ச் சொற்களைச் சென்னை சர்வகலாசாலை தமிழ் அகராதியில் பார்த்தல் வேண்டும் எனக் கூறுவாம். அதன் பிழை திருத்தங்களை மட்டுமே எம் அகராதியில் காண்மின்.

இஃது தமிழ்-ஆங்கில-தமிழ் ஒப்பியல் அகராதியின் ஏழாம் பகுதியாகும். முதல் ஆறு பகுதிகளும் சுவாமி ஞானப்பிரகாசரால் 1938-1946 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. ஆயினும் அப்பகுதிகளைக்காண இயலாதவர்களின் தேவைக்காக இஃதில் அவற்றின் முக்கியமான அம்சங்களைச் சுருக்கமாக அடக்கிக் கூறுதும்.

முன்குறித்த மொழியினங்களுள் உள்ள நூற்றுக்கு மேலதிகமானமொழிகளின் சொற்களோடு தமிழ்ச்சொற்கள் ஒப்பாராயப்படுமாதலின், இந்நூல் "ஒப்பியலகராதி" எனப் பெயர்பெறும். தமிச்சொற்களின் பிறப்புத் தோற்றமாகிய பகுதிகளும் அவற்றின் தொடர்புகளும் தமிழ்மொழியினைக் கற்க ஆரம்பிப்போரின் ஞாபகத்தில் பதிதற்கு இந்நூலின்கண் தரப்படும் இலகுவான விளக்கங்களும் நுண்ணிய ஆராய்ச்சிகளும் பேருதவி அளிக்குமென நம்புகின்றனம்.

முதற்பகுதி தோற்றுவாய் ஆகும். இதின்கண் 24 "ல், ள், ழ்" எனுமிடையினங்களில்மூற்றும் ஒலைச்சொற்கள் அன்றேல் பகுதிகளின் மூலமாக மூவாயிரத்திற்கு மேற்பட்ட இவற்றின்விரிவுகள் (உ-ம் 'விளீ' விடு, வீடு, விண்டு, விண்டர், விடுதலை) இஙஙனம் ஆராயப்படும். "ஐயையோ! இத்தாவீது அடிகள் கல்வி எனும் ஆழ்கடலில், நூற்றுக்கு மேற்பட்ட வேறு மொழிகளைக் கொண்டு, எம்மனத்லைத ஆழ அமுக்கப் போகின்றனரே" என அச்சமுற வேண்டாம். இஃதைச் சிந்திப்பீர்: "பஞ்சாரி, மருந்துமுதலிய சரக்கு விற்போன், பரிகாரி, டாக்குத்தர் — இவர்கள் ஒரு மனிதனுக்கு தம் மருந்துகள் அனைத்தையும் ஒரே நோத்தில் அளிப்பரோ" அங்ஙனமே ஈங்கண்ணும். "Art lies in concealing Art."

"காலம் அறிந்தாங்கு, இடமறிந்து, வினைவறிந்து, ஆள் வினை ஆளப்படும்." மிகச்சாதாரணமான—பதங்களாய "கோவிச்சி, சான்றோர், தங்கைச்சி, புடவை, பாய்ந்து, புடலை, புலம்புதல், வண்ணாத்தி, விச்சை"—போன்ற பதங்களின் உண்மையான உற்பத்தியை அறிய விரும்பின், இத்தோற்றுவாயை முதற்பக்கந் தொடங்கி முழுவதுஉம் வாசியுமின். சமஸ்கிருத அன்றேல் வடமொழியினின்றும், பிறமொழிகளினின்றும் தமிழ் அநேக சொற்களை இரவலாக வாங்கியது உண்மையாயினும் இஃது படிப்படியாகவும் சென்ற 24 நூற்றாண்டுகள் மட்டிலுமே நடைபெற்றது. ஆனால் கி. மு. 1500-ம் ஆண்டு தொடங்கி, ஆரியரின் முதல் நூல்களாய இருக்கு முதலிய வேதங்களும், வேதாந்தமாய உபநிடதங்களும் "ஆரண்யக" என்பனவும செஞ்சங்கத காவியங்களும், சமஸ்கிருத நிகண்டுகளும், "பாளி—பிராகிருத" அநேக பிரபாதங்களும், வடஇந்தியாவின் தற்போதைய ஆரிய மொழிகள் அனைத்தும் ஆயிரங்கணக்கான **திராவிடப் பதங்களைக் கடன் வாங்கியமை இஃதில்காட்டப்படும்:** மேலும் சிங்களப் பதங்களின் உற்பத்தி இவற்றில் அடங்கியதுளன்க:

1. வட-கீழ் இந்தியாவின்கண் ஈராயிரம ஆண்டுகளுக்கு முன் வழங்கிய **பிராகிருதம்.** இஃது "**மாகதி**" என்பதற்கு மிக அண்மையாய் இருந்தது.

2. சிங்களவர் புத்தசமயத்தைத் தழுவியபின்பு புத்தமத மொழியாய "**பாளி, பாலி**" என இருவிதமாக அழைக்கப்படும் தொல்பிராகிருதம்.

3. கல்விபயின்ற யாவரும் அந்நாட்களில் உபயோகித்த சமஸ்கிருதம்.

4. மேற்கூறிய 19 திராவிட மொழிகளுக்கு அண்மையானதும், "எணடேரமுல்ல" போன்ற சில பதங்களை மட்டுமே சிங்களத்திற்கு அளித்தபின்பு மறைந்து போனதுமான **ஈழத் திராவிடம்.**

5. ஒரே நாட்டின் இரு மருங்கிலும் தமிழரும், சிங்களவரும் பலநூற்றாண்டுகளாக அந்நியோன்னியமாக வாழ்ந்தமையின் பயனாக, சிங்களம் தமிழ்மொழியினின்று கடன் வாங்கிய பலநூற்றுக்கணக்கான **தமிழ்ப் பதங்கள்.**

இவை ஐந்தும ஒருமித்தே சிங்களத்தை உண்டாக்கின என்று தருணத்திற்கு ஏற்றபடி இந்நூலின்கண் விளக்கப்படும்.

விலை: 7-ம் பகுதி மட்டும் 10 ரூபா; 7-ம், 8-ம், 9-ம், 10-ம பகுதிகள் ஒருமிக்க ரூபா 30. இஃதைப் பதிப்பிப்போரின் தீவிர தேவைக்காகக் காசை M. O. மூலம், அதிவண. யுவான் பிரான்சிஸ் சுவாமியார், சம்பத்திரிசியார் கலாசாலை, யாழ்ப்பாணம், என்னும் மேல்விலாசத்திற்கு அனுப்பவும். கூடியவிரைவில்.

## "பரமெழுந்திடப் போந்தார்"

அந்தமிலாத ஆறிலட் சணத்தின்
அன்பொளிர் திரித்துவத் தந்தை
அருள்மொழிக் கிலக்காய் அமலிதன் சேயாய்
அவமது தொலைத்திட் மனுவாய்ப்
பந்தமிற் பரமாய்ப் பரஞ்சுடர்க் குருவாய்ப்
பழுதற வந்தருள் குமரன்
பன்னிரு வயதிற் பக்குவப் பெருமை
பலருமே அறிந்திட மொழிந்து
தந்தையின் தொழிலிற் தனையனு யுழைத்துத்
தவமுழுக் கெய்திடப் பெற்று
தனிமையில் ஒருமை தவசெப நெறியிற்
தயக்கமில் லாதிருந் தருளச்
சிந்தனை அலகை செய்வினை புரிந்து
திகைத்திட அகன்றகல் போகச்
சித்தருள் இறைவன் சேசெனும் நிறைவன்
செகத்தினர் கவடுற நடந்தார்.

❋

நன்மைகள் பொழிந்து நன்மொழி பகர்ந்து
நரவுரு வடிவினைச் சுமந்து
நமதிடை நடந்து நரர்களும் தொடர்ந்து
நவங்களும் நாளதும் நிறைந்து
வன்மைகள் கடிந்து வழிதனைத் திறந்து
வருந்திய சுமைதனைத் தணிந்து
மனமிருள் பணிந்து வகைமுறை அறிந்து
வரமருட் பயனது முணர்ந்து
தின்மைகள் மறந்து தெருவழி புகுந்து
திரளொலி புகழ்ந்திடச் சேர்ந்து
சேசுவை வாழ்த்திச் செருசலேம் கோவில்
சென்றவர் மறுத்தெதிர் கூறத்
தன்மைகள் மாறித் தருக்குரு சேற்றித்
தற்பரன் மரித்துயிர்த் தெழுந்து
சத்தியம் நிலைக்க தத்துவம் மிகுக்கத்
தகுதிநற் திறமுறச் செய்தார்.

❋

செத்தவர் எழுந்தார் செகத்தினைப் புரந்தார்
சீடரை மலைமுக டழைத்தார்
"சித்துடன் கனிவு திட்மருட் துணிவு
செய்திடச் செல்லுவன்" என்றார்.
பத்தரும் பார்க்கப் பரகதி திறக்கப்
பதமல ரெழுந்திட வானோர்
"பார்ப்பவர் வருவார் பவவினை துறப்பார்
பார்த்தக மகிழ்ந்திடும்" என்றார்.
நித்தமும் நாமும் நிந்தனை செய்து
நீசருள் நீசராய் நடந்து
நிறைமுறை தவறி நின்றிடும் போதும்
நிமலனை ஒருகணம் நினையோம்
சித்தமும் செயலும் சிந்தையிற் தெளிந்தாற்
செத்தபின் நாமெலாம் எழுவோம்.
சிலுவையில் மரித்த சேசெமை மீட்டுச்
செயபரம் எழுந்திடப் போந்தார்.

செ. மொத்தம் போல்,
நறுவிலிக்குளம்,
வங்காலை.

## இன்றைய உலகில் தேவஅழைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள ஒரு சிலரைச் சார்ந்தது என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எல்லாரையும் சார்ந்த ஒரு காரியமாகும்" என்று பரி. தந்தை ஏப். 12ஆம நாள் கூறினார். அன்று உலக தேவ அழைத்தல் நாளாகக் கொண்டாடப் பட்டது.

"தேவ அழைத்தல் குறைகிறது. மக்களின் தேவையை நிறைவு செய்ய ஆட்களில்லை. மக்களின் தேவையோ நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. 'அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ சொற்பப் பேர்.' நாகரிகம் வளர்ந்து வரும் இன்றைய உலகின் சூழ்நிலையோ இளைஞர்களின் மனதில் தியாக மனப்பான்மையை, இறைவனுக்காக எல்லாவற்றையும் துறக்கும் ஆசையை உண்டு பண்ணத் துணை செய்யக்கூடியதாகஇல்லை; இன்றைய நாகரிகம் வாலிபர்களுக்கு அளிக்கக் கூடிய கவர்ச்சி தியாகம் தான். அத்தியாக மனப்பான்மை வாலிபர்கள் மனதில் எழ ஆண்டவரை மன்றுடுவோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி
### வைகாசி —1970

| | | | |
|---|---|---|---|
| 10 | ஞாயிறு | பாஸ்கா 7-ம் ஞாயிறு | [வெ] |
| 11 | திங்கள் | புனித பிலிப் யாக். | [சி] |
| 12 | செவ்வாய் | தினப்பூசை | [வெ] |
| 13 | புதன் | ,, | [வெ] |
| 14 | வியாழன் | ,, | [வெ] |
| 15 | வெள்ளி | புனித அருளப்பர் | [வெ] |
| 16 | சனி | தினப்பூசை | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# மரியாய், எமது அன்னை

விசேஷ பக்தி முயற்சிகளுக்கென நாட்களையும், மாதங்களையும் குறித்து அந்நாட்களில் அக்குறித்த பக்தியை அனுசரித்து வருவது கத்தோலிக்கர் வாழ்வில் சகஜம். திருவழிபாட்டுக்கே முதன்மை அளிக்கப்படும் இந்நாட்களிலும் இப்பக்தி முயற்சிகளுக்கு ஆதரவு இருக்கத்தான் செய்கிறது. இவற்றில் முக்கியமானது, வணக்கமாதப் பக்தி. அதாவது, மாதாவுக்கு விசேஷித்தவிதமாக வணக்கம்செலுத்தப்படும் காலம்; மாதாவின் அன்பர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் மாதம்.

தேவதாயாருக்கு நாம் ஏன் இவ்வளவு விசேஷ வணக்கம் செலுத்துகின்றோம்? அவள் தேவதாய் என்றதனால்தான். இந்தத் தாய்மை அவளைக் கிறிஸ்துநாதரிடமிருந்து பிரிக்க முடியாதபடி ஆக்கிவிடுகின்றது. இத்தாய்மை இரண்டு அம்சங்களைக் கொண்டது. நசரேத்தூரில் அவள் கிறிஸ்துநாதரின் உடலுக்குத் தாயாக விளங்கினாள். கல்வாரியில் அவருடைய மறையுடலுக்குத் தாயானாள். இவ்விரண்டும் பிரிக்கமுடியாதபடி ஒன்றுடன் ஒன்று இணைந்திருக்கின்றன. கிறிஸ்துநாதரின் தாயாக இருப்பதனால் தான் மரியன்னை எமது தாயாகவும் விளங்குகிறாள். இது இறைவனின் திட்டத்தில் அமைக்கப்பட்டு மரியாயினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. சிரசுக்கு மானிட உயிரை அளித்த அவளே அங்கங்களுக்கு ஆன்மீக உயிரை அளிக்கிறாள். தேவ திருவருளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் இறைவனாலேயே அவளுக்கு அளிக்கப்பட்டது. "இதோ உன் தாய்" என்ற வார்த்தைகள் எம் ஆண்டவர் எமக்களித்த இறுதிக் கட்டளை என்று கருதுவோமாக. மாதாவை எமது தாயெனக் கொண்டு அன்பு செலுத்துவதும் அவளை மகிமைப்படுத்துவதும் எமது கடமையாகும். அது மட்டுமல்ல,

12-ம் பத்திநாத பாப்பரசர் கூறியது போல, "தமது பிள்ளைகள் உருவத்தில் தம்மை ஒத்திருப்பது எந்தத் தாய்மாருக்கும மகிழ்ச்சியை ஊட்டக்கூடிய தொன்றாகும். அவ்விதமேதான் சிலுவையடியில் சுவீகரித்துக்கொண்ட மக்கள் தம் சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும தனது ஆத்துமத்தின் அழகைப் பிரதிபலிப்பது தேவதாய்க்கு மிகவும் பிரியமானதும், அவளை ஆனந்தப்படுத்தக் கூடியதுமாகும்." இதில் பக்தி, வணக்கம் முதலியன தேவதாயைப் பின்பற்றுவதற்கும், அவளுக்கு உவப்பான ஒரு வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்வதற்கும் உதவ வேண்டும் என்ற உண்மை அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, மாதாவின் புண்ணியங்களை நாமும் பின்பற்றி அனுசரிக்க முயலவேண்டும். எமது சொந்த சக்திக்கு அது அப்பாற்பட்டதாக இருக்குமாகில் குழந்தைகளைப்போல் மாதாவின் உதவியை நாடினால், அவள் துணைபுரிவாள் என்பதை மறந்துவிடலாகாது.

---

கோழையாக இல்லாமல், வேடதாரியாக ஆகாமல், ஒவ்வொரு மனிதனையும் மகிழ்விக்க முயற்சிசெய். தூய்மையுடனும், உண்மையுடனும் உன் கொள்கையைக் கடைப்பிடித்து நட. நிகழ்காலத்தில் உனக்கு எவ்வளவு தடைகளிருந்தாலும் எதிர்காலத்தில் உலகம் உன் சொற்களுக்குச் செவிகொடுத்தே தீரும் என்பதை மறவாதே.

— ஓர் அறிஞர்

# "கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதவன் கிறிஸ்துவின் உடையவன் அல்ல"

### (உரோமர் 8-ம் அதி. 9-ம் வசனம்)

பரி. சின்னப்பர் ரோமருக்கு எழுதிய நிருபம் 8-ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும், உன்னதத்தில் இருந்துவரும், அந்தக் கொடையைப்பற்றியும், அவர் மூலமே மாம்சத்தின் மக்கள் ஆவிக்குரிய மக்களாக மாறவேண்டும் என்றும விளக்குகிறார்.

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள், மாம்சத்துக்குரியவைகளையே சுவைபார்க்கிறார்கள் என்றும், ஞானத்தின்படி நடக்கிறவர்கள், ஞானத்துக்குரியவைகளையே சுவைபார்க்கிறார்கள் என்றும, மாமிச சிந்தை மரணம்; ஞானத்தின் சிந்தையோ சீவியம்என்றும் வெகுதெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

உண்மையாகவே, பிதாவையும், கிறீஸ்துவையும் ஐக்கியப்படுத்தும் அன்பின் ஆவியைக் கொண்டிராதவன், கிறீஸ்துவின் அன்பை, அவரது சிநேகத்தை சுவைபார்க்கவே முடியாது. கிறீஸ்துவை ஆவிக்குரியவிதமாய் சுவைப்பவனே அவரது அன்பின் தன்மையை அறிகிறான். அவரது அன்பில் ஐக்கியப்பட்டு பிதாவுடன் ஒன்றிக்கிறான். அப்போது அவனது இதயம், ஜீவஜலத்தால் நிரப்பப்பட்டு பிறர்சிநேகக் கிரிகைகளைப் புரிய முன்நிற்கிறான். இவ்வாறு அவனிடத்து நிரம்பிவழியும ஜீவஜலமே, அவன் மூலம் வழிந்தோடி, பிறரையும இறைவனுடன் ஒன்று சேர்க்கிறது. எவ்வாறெனில், அவன் அற்புதமான வல்லபத்தைப் பெறுகிறான். அதிசயமான செயல்களைப் புரிகிறான். அவன் நாவு சத்தியத்தையும், நீதியையும் பிறப்பிக்கின்றது. இப்படியே இறைவாக்கினரைப் பேசப்பண்ணியவரும், இறைவாக்கியங்களடங்கிய வேதாகமத்தை எழுதப்பண்ணியவரும் இத்தூய ஆவியானவரே. உலகம் உண்டான காலம்முதல், பிதாவின் அன்புச் செயல் தூய ஆவியானவராலேயே பரிணமித்துவந்தது. வருகிறது. வேளா வேளைகளில் தருணை தருணங்களில், இறைவனின் சித்தம், வெளிப்படையாக மக்களில் நிறைவேற உதவி புரிபவரும் அவரே. பிதாப் பிதாவாகிய ஆபிரகாமுக்கு விசுவாசத்தின் பெலனையும், மோசேசுக்கு இஸ்ரேயல் மக்களை கொடிய பார்வோன் மன்னனிடம் இருந்து மீட்டு வழிநடத்திச் செல்லும் தைரியத்தையும், பரி. பவுல் அப்போஸ்தலருக்கு, பலகஸ்திகள் மத்தியில் பிறசாதியாருக்குச் சுவிசேஷத்தை அறியவைக்கும் வல்லபத்தையும் அருளியவர் அவரே. இஸ்றேயல் மக்களுக்கு வழிப்பயணத்தில் வெப்பத்தைத் தணிக்கும் மேகமாகவும், இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கும் தூணாகவும் நின்று உதவியவரும் அவரே.

அன்றியும், தேவஅன்னையைப் புனிதப்படுத்தி, யேசுநாதரை அவளின் உதரத்தில் உருவாக்கியவரும் அவரே. யோர்தான் நதிக்கரையில் கிறீஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது, அவரிடத்து புறுவடிவாகவும், அப்போஸ்தலரில் அக்கினி நாக்கு ரூபமாகவும் எழுந்தருளி அப்போஸ்தலரின் பெலவீனத்தை மாற்றியமைத்து, மலைகளைப் பெயர்க்கத் தக்கது மாத்திரமல்ல, இரத்தம் சிந்தி உயிரையே கொடுத்து, கிறீஸ்துவுக்கு சாட்சிபகர வைத்தவரும் அவரே. அத்துடன் திருச்சபையின் ஆன்மாவாய் இருந்து, அப்போஸ்தலரையும், வேதசாட்சிகளையும், புனிதரையும், இறைவாக்கினரையும், கன்னியரையும் பிறப்பிப்பவரும் இத்தூய ஆவியானவரே.

— நாதன் —

திருச்சபையை எவ்விதஆக்கிரமிப்பும்,நாசத்தின்வாசலும் மேற்கொள்ளவிடாது, அதில் புரட்சி வரப்பார்க்கும் போதெல்லாம், மலர்ச்சியடையச் செய்து, அதற்குப் புத்துயிர் அளித்து, இரண்டாயிரம் வருடங்களாக, அதை விண்ணரசின் நேரியபாதையில் இட்டுச் செல்பவரும் அவரே. கிறீஸ்தவ இல்லறவாசிகளுக்கும். உறுதுணையாக இருந்து அவர்கள் வாழ்க்கையில் எவ்வித நச்சுப் புகையும் செறியவிடாது. கிறீஸ்துவின் வாழ்வை அவர்களில் மலரச் செய்து பாதுகாப்பவரும் அவரே. நம்பரலோக பிதா, ஞானஸ்நானத்தின் மூலமாகவும், விசேஷமாக உறுதிபூசுதல் வழியாகவும் நமக்குத் தந்த அருங்கொடையாகிய இப்புனித ஆவியை, நம் பாவங்களால் போக்கடிக்கும்போதெல்லாம் மனவருத்தத்துடன் திரும்பவும் அவரைப்பெற, நம் அப்போஸ்தலரைப் பின்பற்றி, அமைதியாகக் காத்திருந்து, செபத்துடனும் தபத்துடனும் பெற்றுக்கொள்வோமாக.

இன்று உலகம் லௌகீக இன்பங்களை, என்றும்தவறாது சரிவர அனுபவிக்கவேண்டும். என்று கங்கணங்கட்டி, கிறீஸ்துவின் போதனைகளை தமக்கேற்றவிதமாக இலகுவாக்கி, அவர் சிலுவைவழியாகப் பெற்றுத்தந்த ஐசுவரியங்களை இழந்துஅந்தகாரத்தின்பாதையில நடந்து செல்கின்றனர் என்றால், பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்து, அவர்கள் ஆன்மாவில் இல்லையென்றே கூறவேண்டும். பிதாவினின்றும், சுதனில்நின்றும் பிறந்துவரும் அந்த அன்பின் சுனையாகிய ஜீவஜலம் என்னும் ஆவியானவர் அவர்களைவிட்டு நீங்கிவிட்டார் என்றே எண்ணவேண்டும். நம்மீட்பர் சமாரியஸ்திரிக்கு அவளது பாவநிலையை விளக்கியபோது பரி. அரு. 4-ம் அதி. 14-ம் வசனத்தில் "நான் கொடுக்கும் சலம் நித்தியசீவியத்துக்குப்பாய்கிற நீரூற்றாகும்" என்றார். பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் அந்த சீவசலத்தை, பிதாவிலும் சுதனிலும் நின்று புறப்படும் அன்பு ஊற்றிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை, காட்சிஆகமம்22-ம் அதி. 1-ம் வசனத்தில் இருந்து அறிகிறோம். அதாவது "பின்பு பளிங்கைப்போல் தெளிந்த சீவசலமுள்ள ஒருநதி. சருவேசுரனும் செம்மறிப் புருவையானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்தும் புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தார்" என்பதாம். விவேகமுள்ள மனிதனே, இவ்வுலக இன்பத்தின் நிலையாமையையும் தெய்வீகஇன்பத்தின் பூரணத்துவத்தையும், தூயஆவியானவரின் வெளிச்சத்தில் கண்டடைவான். அப்போது அவனதுஉள்ளம் தூயஆவியானவரின் அந்தரங்க வாசத்தினால் தைரியம் அடைந்து அவன் தன்னை எதிர்த்துவரும் பசாசின் ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு, இறைவனுடன் ஒன்றித்து, அவர் சித்தத்துக்குப் பணிந்து விண்ணரசின் யாத்திரையை இன்பமாக முடிப்பான்.

# கலப்பு விவாக சட்டங்....

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சந்தர்ப்பங்களில் திருமணம் செய்துகொள்ளும் கத்தோலிக்கர் அல்லாத பாலார்மேல் சிலநிபந்தனைகளை விதித்து அவற்றுக்கு உடன்பாடுபெற்றே திருச்சபை இதுவரையும் திருமணம் நடத்திவந்தது. இத்தகைய நிபந்தனைகளை விதிப்பது விதிக்கப்படும் கத்தோலிக்கரல்லாதோரின் மனச்சாட்சிக்குப் பிழை செய்வதாக எடுத்துக்காட்டப்பட்டுவந்தனவற்றை 2-ம் வத்திக்கான் சங்கத்தின்போது செய்த கூர்ந்தஆலோசனையின் பயனாகபரிசுத்ததந்தை6-வது சின்னப்பர் இக்கலப்பு விவாகவிதிகளில் சிலமாற்றங்கள் செய்யும் பொறுப்பை பிரதேசமேற்றிராணிமார்களுக்கு விதித்திருப்பினும் திருத்தங்கள் இவ்வருடம் ஐப்பசிமாதத் தொடக்கத்துடனேயே அமுல்நடத்தப்படும். இலங்கை மேற்றிராணிமாரின்சபை இதையிட்டு விரைவில் முடிவுகள் செய்ய இருக்கிறது,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு வைகாசிமீ 9ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org